## கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை
## கலைப் பீடம்

### சிறப்புக் கலைமாணிப் பரீட்சை (புவியியல்) – பகுதி III, 2021/ 2022
### முதலாம் பருவ இறுதிப் பரீட்சை

### GYG 4199 - பிரயோக மருத்துவப் புவியியல்

நேரம்: இரண்டு (02) மணித்தியாலம்

மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

............................................................................................................................

1. (i) தொற்று நோய்கள் இரண்டினையும், தொற்றா நோய்கள் இரண்டினையும் குறிப்பிடுக.

   (02 புள்ளிகள்)

   (ii) மேற்குறிப்பிட்ட நான்கு (04) நோய்களில் ஏதேனும் ஒன்றினைத் தெரிவுசெய்து அதன் தோற்றம் மற்றும் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் புவியியற் காரணிகள் பற்றி உதாரணங்களுடன் விளக்குக.

   (06 புள்ளிகள்)

   (iii) "எமது வாழ்வில் பின்பற்றப்படும் நடவடிக்கைகளே அனேகமாக தொற்றா நோய்களின் வரவிற்கு காரணமாகவுள்ளன". இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? பொருத்தமான உதாரணங்களைக் காட்டி இக்கூற்றினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

   (12 புள்ளிகள்)

2. (i) நீர் வாழும் சுற்றுப்புறச் சூழலில் அடையாளம் காணக்கூடிய ஆறு (06) மருத்துவ மூலிகைகளைக் குறிப்பிடுக.

   (02 புள்ளிகள்)

   (ii) முகப்பொழிவு மற்றும் சருமத்தின் பிரகாசத்திற்கு பிரயோகிக்கக்கூடிய மூலிகை வகைகள் மூன்றின் முக்கியத்துவம் மற்றும் இலங்கையில் அதன் பரம்பல் தொடர்பாகவும் உதாரணங்களைக் காட்டி விவரிக்குக.

   (06 புள்ளிகள்)

   (iii) இலங்கையில் சுதேசிய மருத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதில் காணக்கூடிய நேர் மற்றும் எதிர் மறையான பார்வைகள் தொடர்பாக உமது கருத்துக்களைத் நுணுகி ஆராய்க.

   (12 புள்ளிகள்)

3. (i) 'உணவு நச்சூட்டல்' என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(02 புள்ளிகள்)

(ii) உணவு வகைகளில் காணக்கூடிய நச்சுத் தன்மை வாய்ந்த இரசாயனப் பொருட்களின் சேர்க்கைகள் மற்றும் அதன் அபாயங்கள் தொடர்பாகப் பரிசீலிக்குக.

(06 புள்ளிகள்)

(iii) மேலே வினா இல 3. (ii) இன் விபரீதமான நிலைப்பாட்டிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள மேற்கொள்ள வேண்டியதும், நடைமுறைக்குப் பொருத்தமானதுமான உபாய முறைகள் பற்றி விரிவாக ஆராய்க.

(12 புள்ளிகள்)

4. (i) நோய் பரவல் (diffusion of disease) முறைகள் இரண்டினைப் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

(ii) மேலே வினா இல 4. (i) இல் குறிப்பிட்டுள்ள நோய் பரவல் முறையொன்றினைத் தெரிவுசெய்து, அதனை தற்கால நோய்ச் சூழல் ஒன்றுடன் தொடர்புபடுத்தி விவரிக்குக.

(06 புள்ளிகள்)

(iii) வேகமான நோய் பரவல் தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்காக தற்போது உலக நாடுகளால் முன்னெடுக்கப்படுகின்ற உத்திகள் தொடர்பாக உதாரணங்களுடன் ஆராய்க?

(12 புள்ளிகள்)

5. (i) மாசுற்ற வளியினால் ஏற்படக்கூடிய உடல் நலப் பாதிப்புக்கள் நான்கினைத் தருக.

(02 புள்ளிகள்)

(ii) சிறுவர்களைத் தாக்கியுள்ள சுவாச நோய்கள் இரண்டினைப் (02) பற்றிப் பொருத்தமான உதாரணங்களுடன் விவரிக்குக.

(06 புள்ளிகள்)

(iii) மேற்குறிப்பிட்ட நோய்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்துக்கொள்ள பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகளை நுணுக்கமாக விவரிக்குக.

(12 புள்ளிகள்)

......................................